(8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

145. 1974–75-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு நிறுவனத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

146. தமிழ்நாடு மின்சார வாரியத்தின், 1979–80 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையும், 1978–79 ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கையும் 1948–ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61 (1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*171. கோரிக்கை எண் 29—தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1979–80 (தமிழ், ஆங்கிலம்).

*172. கோரிக்கை எண் 21-மீன்வளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979–80 (தமிழ், ஆங்கிலம்).

*173. 1979–80-ஆம் ஆண்டில் மீன்வளத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

**174. கோரிக்கை எண் 8—தேர்தல் குறித்த மானியக் கோரிக்கை மீது மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் வரைவு உரை—கொள்கை விளக்கக் குறிப்பு, 1979–80 (தமிழ், ஆங்கிலம்).

**175. கோரிக்கை எண் 44—எழுது பொருள் அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு. 1979–80 (தமிழ், ஆங்கிலம்).

கோரிக்கை எண்கள் 35, 21-க்கான வெட்டுத் தீர்மானங்களின் பட்டியல் 19-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன :—

* 18.4.1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.
** 19.4.1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.